EDCS

ආරම්භය: 1930 ලි.ප. අංකය: 736
ஆரம்பம்: 1930 பதிவு இல: 736
Inception: 1930 Reg. No: 736

# வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம்

# பதவி வெற்றிடங்கள்

வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம் நாட்டின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிக்கன கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகச் செயற்படும் கூட்டுறவுச் சங்கமாகும்.

இந்தச் சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள உதவிக் கணக்காளர், உதவிக் கணக்காய்வாளர் மற்றும் பயிற்சியளிக்கும் அதிகாரி எனும் பதவி வெற்றிடங்களுக்காக திறமை மிக்க, சுறுசுறுப்பான மற்றும் அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடிய தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## உதவிக் கணக்காளர் பதவி - E.3.2.1 (நிறைவேற்றுத் தரத்தின் IIIம் வகுப்பு)

**தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / கணக்கியல் போன்ற துறைகளில் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பட்டயக் கணக்காளர்களின் முகாமைத்துவ நிறுவனத்தில் CIMA இறுதிக் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 2 வருட அனுபவம்

அல்லது

- இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமொன்றில் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 3 வருட அனுபவம்

அல்லது

- இலங்கை கணக்கியல் நுட்பவியல் நிறுவனத்தின் AAT இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 4 வருட அனுபவம்
- பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் கணக்கியல் தொடர்பான உயர் டிப்ளோமா அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் நிறைவேற்றுத்தர பதவியொன்றில் 6 வருட அனுபவம்

அல்லது

- இலங்கை தேசிய கூட்டுறவு சபையில் கூட்டுறவு அபிவிருத்தி உயர்தரத்தில் சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 7 வருட அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் ரூபா 29,900 - 250x10 - 275x10 - ரூபா 26,950.00

**முகாமைத்துவ உதவியாளர் பதவி: 0.1 (செயற்பாட்டுத் தரத்தின் IIIம் வகுப்பு)**

**தகைமைகள்:**

- க.பொ.த. உயர் தரத்தில் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி

அல்லது

- கணிதம், மொழி மற்றும் ஆங்கில பாடங்கள் உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியுடன் தேசிய கூட்டுறவுச் சபையினால் வழங்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி சாதாரண தரத்தில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப நிறுவனத்தில் அலுவலக வேலைகள் தொடர்பில் ஒரு வருடகால அனுபவம்

அல்லது

- அலுவலக முகாமைத்துவ பாடத்தில் திறமைச் சித்தியுடன் தேசிய கூட்டுறவுச் சபையினால் வழங்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி சாதாரண தரத்தில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப நிறுவனத்தில் அலுவலக வேலைகள் தொடர்பில் 02 வருடகால அனுபவம்

அல்லது

- அலுவலக வேலை உதவியாளர் பதவியின் 1ம் தரத்தில் 05 வருட அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் ரூபா 21,700 - 250x10 - 275x10 - ரூபா 26,950.00

மேற்கூறிய மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உரித்தாகும்.

## கணக்காய்வாளர் - E.3.3.1 (நிறைவேற்றுத் தரத்தின் IIIம் வகுப்பு)

**தகைமைகள்:**

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

- இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமொன்றில் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறை பதவியொன்றில் ஒரு வருட கால அனுபவம்

அல்லது

- இலங்கை கணக்கியல் நுட்பவியல் நிறுவனத்தின் AAT இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 02 வருட கால அனுபவம்

அல்லது

- பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் கணக்கியல் தொடர்பான உயர் டிப்ளோமா அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 03 வருட கால அனுபவம்

அல்லது

- இலங்கை தேசிய கூட்டுறவு சபையினால் நடாத்தப்படும் கூட்டுறவு அபிவிருத்தி உயர்தரத்தில் சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 05 வருட கால அனுபவம்

அல்லது

- முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 1ஆம் தரத்தில் கணக்கியல் அல்லது கணக்காய்வுப் பிரிவிற்கு இயைபாக 05 வருட கால அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் ரூபா 28,700 - 425x10 - 450x10 - ரூபா 37,450.00

மேற்கூறிய மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உரித்தாகும்.

## பயிற்சியளித்தல் அதிகாரி - E.3.2.1 (நிறைவேற்றுத் தரத்தின் IIIம் வகுப்பு)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01 - தலைமை அலுவலகம்**

**தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனித வளம் / முகாமைத்துவம் / சமூக விஞ்ஞானம் போன்ற துறைகளில் பட்டம் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சியளித்தல் துறையில் ஒரு வருட கால அனுபவம்

அல்லது

- பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா சகிதம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சியளித்தல் துறையில் 03 வருட கால அனுபவம்

அல்லது

- இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் கூட்டுறவு அபிவிருத்தி உயர் தரத்துடன் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சியளித்தல் துறையில் 06 வருட கால அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் 29,900 - 475X10 - 500X10 - ரூபா 39,650.00

**பொது நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சுய தரவுகள் சகிதம் சகல கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உள்ளடக்கி தங்களாலேயே தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் தற்போது நீங்கள் கூட்டுறவுச் சங்கமொன்றில் சேவையில் உள்ளவராயின், குறித்த விண்ணப்பத்தை அந்த கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- இப்பதவிகள் ஓய்வூதியம் அற்ற பதவிகளாகும். தேர்ந்தெடுக்கப்படுபவரின் சம்பளத்தில் 10%, நிறுவனத்தினால் 15% சகிதம் ஊழியர் சேமலாப நிதியில் வைப்புச் செய்யப்படும்.
- நேர்முகப்பரீட்சையின் மூலம் தகைமை வாய்ந்தவர் தேர்ந்தெடுக்கப்படுவார். பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
- உதவிக் கணக்காளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் போன்ற பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் சங்கத்தின் எந்தவொரு மாவட்ட அலுவலகத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.
- தமது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பிறப்புச் சான்றிதழின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி சகிதமான விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2024-06-29ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும்.


**பிரதான தலைவர்,**
**வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம்,**
**294, காலி வீதி, கொழும்பு-03.**
**தொலைபேசி இல. 011 2370717 தொலைநகல் இல. 011 2577475**